**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் – 79/2022**

**வாதி தரப்பு சாட்சி–1 சண்முகம் திரு.என்.கார்த்திக், இளநிலை உதவியாளர்** அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 09.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**3 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் வேலாயுதம்பாளையத்தில் குடியிருக்கிறேன். நான் 10 வகுப்பு படித்துள்ளேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக 12 வருடமாக பணிபுரிகிறேன். இவ்வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். எனது சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டதா என்றால் ஆவணத்தின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டது. தாவா சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம், பட்டா எண் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்தின் சர்வே எண்.128/1G, விஸ்தீரணம் 1 ஏக்கர் 89 சென்ட் ஆகும். பட்டா எண்.170 ஆகும். அது யார் பெயரில் உள்ளது என்றால் கிருஷ்ணமூர்த்தி, காமராஜ், சத்தியப்பிரியா, சுபாஷினி, சசிக்கலா, தனலட்சுமி ஆகியோர்கள் பெயரில் கூட்டாக உள்ளது.

2) பட்டா எண்.170 ல் உள்ள சொத்தைப் பொறுத்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்து கடவூர் வட்டத்தை சேர்ந்தது. தாவா சொத்து கிணற்று பாசனத்துடன் கூடிய நஞ்சை நிலமாகும். தாவா சொத்தில் உள்ள கிணறு எந்த வடிவத்தில் உள்ளது என்றால் சதுர கிணறு ஆகும். மேற்படி கிணற்றில் 5 H.P. மின் மோட்டார் உள்ளது. மேற்படி மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் ஆறுமுக ஆசாரி மகன் மாணிக்கம் ஆசாரியின் பெயரில் உள்ளது. மாணிக்கம் ஆசாரி பெயரில் மின் இணைப்பு உள்ளதை என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

**Sd/–R. தமிழரசி**
**Principal District Munsif,**
**Kulithalai.**